THE HINDU - ENGLISH
Dated: 29.01.2025

# BJP wants Kejriwal barred from campaigning following controversy over ammonia in Yamuna

**The Hindu Bureau**
NEW DELHI

**Reacting to remarks, AAP leader says he willl not 'let people die in Delhi' because of poisonous water**

A war of words ensued in the national capital ahead of the Assembly election, a day after the Aam Aadmi Party accused the BJP-led Haryana government of mixing ammonia in the waters of the Yamuna river before releasing it to Delhi, which could have caused "mass genocide".

The BJP, refuting the charge, sought a ban on Mr. Kejriwal's participation in campaigning until the completion of the electoral process for the Assembly election, alleging that his continued participation may lead to "potential public unrest". The party sought the filing of an FIR against the former Delhi Chief Minister.

Mr. Kejriwal reacted with a scathing attack against the BJP, saying he would not "let people die in Delhi" because of poisonous water.

"Go ahead, file a case. Is there anything left that you haven't already done? You have sent me to jail, so hang me if you must. File a case, but will you kill the people?" he said at a press conference. Mr. Kejriwal warned against 'playing politics' on an important issue concerning the health of people.

A BJP delegation comprising Union Ministers Nirmala Sitharaman and Bhupender Yadav, and Haryana Chief Minister Nayab Singh, met the Election Commission (EC), asking that the AAP leader be directed to retract his charge, and apologise for creating "panic" among people.

**'Baseless claims'**

The BJP said Mr. Kejriwal's allegation was not only baseless but also dangerous to public order and harmony..."such inflammatory statements, made without any evidence whatsoever, constitute a severe breach of several electoral and other statutes in addition to electoral ethics. These allegations are particularly concerning as they involve matters of public health and safety, potentially causing unnecessary panic among millions of Delhi residents," the memorandum submitted to the EC said.

Delhi Chief Minister Atishi also paid a visit to the EC, to complain that ammonia levels were "six times above normal", warning that such water could not be treated or supplied to residents of the city without risk to their health. Ms. Atishi appealed to the EC to intervene in the matter.

DECCAN CHRONICLE
Dated: 29. 01. 2025

## Produce proof of water poisoning, EC tells Kejriwal

New Delhi, Jan. 28: The Election Commission on Tuesday sought factual evidence from AAP leader Arvind Kejriwal to substantiate his allegation that neighbouring Haryana is poisoning the Yamuna river, as it reminded him of legal provisions that can lead to up to three years' imprisonment for "mischievous" statements against national integration. P5



# Produce proof of water poisoning, EC tells Kejriwal



**New Delhi, Jan. 28:** The Election Commission on Tuesday sought factual evidence from AAP leader Arvind Kejriwal to substantiate his allegation that neighbouring Harya na is poisoning the Yamu na river, as it reminded him of legal provisions that can lead to up to three years' imprisonment for "mischievous" statements against national integration and public harmony.

In a letter to Mr Kejriwal, the Election Commission (EC) sought by 8 pm on Wednesday the nature and extent of the chemicals used for "poisoning" the Yamuna which could have kill people in large numbers, as claimed by the AAP chief.

The EC also asked Mr Kejriwal to share details of his claim that engineers of Delhi Jal Board had actually detected and prevented it on time.

Both the BJP and the Congress had complained to the poll panel against Mr Kejriwal for levelling allegations of poisoning of Yamuna river. The EC is also awaiting a factual report from the Haryana government on the issue.

Separately, Delhi Chief Minister Atishi had alleged that rising ammonia levels in the water supplied to Delhi by Haryana could seriously affect water supply to the national capital.

DECCAN CHRONICLE

Dated: 29. 01. 2025

## EC MUST ACT NOW!

**APROPOS** the news report "Atishi: BJP using unfair tactics to avoid poll defeat" (Jan. 28), I am shocked beyond measure to learn that the ruling party at the Centre could stoop so low as to deliberately disrupt Delhi's water supply to ensure the defeat of the AAP. This is a criminal offence and the EC cannot deny its constitutional responsibility to verify the veracity of the complaint before any unfortunate incident occurs due to the alleged mixing of poison in the water. The Election Commission must give a patient hearing to Delhi chief minister Atishi and get to the bottom of the matter without any delay.

**Arun Gupta**
*Kolkata*

D.T. NEXT
Dated: 29.01.2025

# BJP-AAP war over Yamuna poison claim, EC seeks proof

## Poll body sets 8 pm deadline for Kejri to submit evidence

**NEW DELHI: A heated political battle erupted Tuesday over Arvind Kejriwal's claim of the Haryana government "poisoning" the Yamuna water, with the BJP saying he cannot be forgiven for his "dangerous statement", while the AAP chief asserted he won't let the people of Delhi die due to the dirty, poisonous water.**

The AAP and the BJP also moved the Election Commission, with the saffron party seeking to bar Kejriwal from campaigning. The poll panel sought factual evidence from the AAP chief to substantiate his claims.

Meanwhile, Delhi Lt Governor VK Saxena wrote to Chief Minister Atishi, saying her party chief's remarks are highly objectionable and amount to endangering national security.

Atishi and her Punjab counterpart Bhagwant Mann met the Election Commission officials, alleging the BJP-led Haryana government is deliberately releasing alarming levels of ammonia into the Yamuna river, endangering Delhi's water supply.

Saxena asked the Delhi chief minister to rise above "narrow interests" and refrain from making "misleading, dangerous, and baseless statements" for the sake of public welfare and peace.

Later, a BJP delegation, led by Union Finance Minister Nirmala Sitharaman and Haryana CM Nayab Singh Saini, also approached the EC seeking its direction to bar Kejriwal from campaigning for the February 5 Delhi Assembly polls for his "dangerous statement" with implications for India's federal structure.

The delegation requested the EC to ask Kejriwal to retract his charge and apologise for creating "panic" among people. They also demanded legal action against him.

Following the meetings, the EC sought factual evidence from Kejriwal to substantiate his allegation, and reminded him of legal provisions that can lead to up to three years' imprisonment for "mischievous" statements against national integration and public harmony.

In a letter to Kejriwal, the EC sought by 8 pm on Wednesday the nature and extent of the chemicals used for "poisoning" the Yamuna which could have killed people in large numbers, as claimed by the AAP chief.

The EC also asked Kejriwal to share details of his claim that engineers of Delhi Jal Board had actually detected and prevented it on time.

Kejriwal alleged on Monday that the BJP-ruled Haryana is supplying "poison-mixed" water to Delhi with the intention of killing people so that it could blame the AAP during the election.

DAILY THANTHI

Dated: 29.01.2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# ஆளும் கட்சியினர் தேர்தல் விதி மீறல்

## தலைமை தேர்தல் அதிகாரியிடம் நாம் தமிழர் கட்சி புகார்

சென்னை, ஜன.29-

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் நாம் தமிழர் கட்சியின் மாநில சட்டப் பிரிவு செயலாளர் சங்கர் அளித்த புகார் மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் எங்கள் கட்சி சார்பில் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். அங்கு போட்டியிடும் ஆளும் கட்சியான தி.மு.க.வினரால் மிரட்டப்படுகிறார். அவர் மீது மாவட்ட போலீசார் மூலம் பொய் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

உதாரணமாக, கடந்த 26-ந் தேதியில் மட்டுமே ஈரோடு போலீஸ் நிலையத்தில் அவர் மீது 3 வழக்குகள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.

தங்கள் செல்வாக்கினால் பல்வேறு நிலை அரசு அதிகாரிகளை ஆளும் கட்சியினர் தங்கள் வசம் வைத்துக்கொண்டு தேர்தல் நடத்தை விதிகளை மீறுகின்றனர். ஓட்டுக்காக வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்களை வழங்க ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அவர்களின் விதி மீறல்களை தேர்தல் அலுவலர்கள் கண்டுகொள்வதில்லை. இதைத் தடுக்க கூடுதல் கண்காணிப்பு குழுக்களை நியமிக்க வேண்டும்.

துணை ராணுவப் படையை உடனடியாக கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DAILY THANTHI

Dated: 29. 01. 2025

யமுனை ஆற்று நீரை நஞ்சாக்கியதாக பேச்சு

# அரவிந்த் கெஜ்ரிவால் மீது தேர்தல் கமிஷனில் பா.ஜனதா புகார்

## பிரசாரம் செய்ய தடை விதிக்க கோரிக்கை

புதுடெல்லி, ஜன.29-

டெல்லி சட்டசபை தேர்தல் பிப்ரவரி 5-ந் தேதி நடக்கிறது. இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக தேர்தல் கமிஷனில் பா.ஜனதா புகார் அளித்தது. மத்திய மந்திரிகள் நிர்மலா சீதாராமன், பூபேந்தர் யாதவ் மற்றும் அரியானா மாநில முதல்-மந்திரி நயாப்சிங் ஆகியோர் 3 தேர்தல் கமிஷனர்களிடமும் கூட்டாக மனுவை அளித்தனர்.

இதுகுறித்து நிர்மலா சீதாராமன் நிருபர்களிடம் கூறியதாவது:-

அரியானா மாநிலத்தை ஆளும் பா.ஜனதா, யமுனை ஆற்று நீரில் விஷத்தை கலந்து, அத்தண்ணீரை டெல்லிக்கு அனுப்பி வைப்பதாகவும், அதை குடித்தால் டெல்லி மக்கள் இறந்து விடுவார்கள் என்றும் அரவிந்த் கெஜ்ரிவால் பேசியுள்ளார்.

அவரது பேச்சு ஆபத்தானது. கூட்டாட்சி முறைக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியது. எந்த ஆதாரமும் இல்லாமல் பேசிய அவர் தேர்தல் பிரசாரம் செய்ய தடை விதிக்க வேண்டும். தனது கருத்தை திரும்பப்பெற்று அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

DAILY THANTHI
Dated: 29.01.2025

கடந்த நிதியாண்டில்

# பா.ஜனதா நன்கொடை 87 சதவீதம், காங்கிரஸ் நன்கொடை 320 சதவீதம் அதிகரிப்பு

புதுடெல்லி, ஜன.29-
கடந்த நிதியாண்டில் பா.ஜனதா பெற்ற நன்கொடை 87 சதவீதமும், காங்கிரஸ் பெற்ற நன்கொடை 320 சதவீதமும் அதிகரித்துள்ளது.

## தேர்தல் கமிஷன் வெளியீடு

அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும், கட்சியின் வருடாந்திர வரவு-செலவு தணிக்கை அறிக்கையை தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி, கடந்த 2023-2024 நிதியாண்டுக்கான வரவு-செலவு அறிக்கையை அரசியல் கட்சிகள் சமர்ப்பித்துள்ளன.

அந்த அறிக்கைகளை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது. அவற்றை ஆய்வு செய்ததில், கடந்த ஆண்டு மார்ச் 31-ந் தேதி நிலவரப்படி, பா.ஜனதா பணக்கார கட்சியாக உருவெடுத்திருப்பது தெரிய வந்துள்ளது.

பா.ஜனதாவுக்கு ரொக்கமாகவும், வங்கிக்கணக்கிலும் மொத்தம் ரூ.7 ஆயிரத்து 113 கோடி இருந்துள்ளது.

## நன்கொடை

கடந்த நிதியாண்டில், பா.ஜனதா பெற்ற நன்கொடை ரூ.3 ஆயிரத்து 976 கோடி ஆகும். இது, முந்தைய நிதியாண்டை விட 87 சதவீதம் அதிகம்.

அந்த நன்கொடையில், கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்ட தேர்தல் பத்திரங்கள் மூலம் மட்டும் பா.ஜனதா ரூ.1,685 கோடியே 69 லட்சம் நன்கொடை பெற்றுள்ளது.

ஆனால், காங்கிரஸ் கட்சியிடம் கடந்த ஆண்டு மார்ச் 31-ந் தேதியன்று ரூ.857 கோடியே 15 லட்சம் மட்டுமே கைவசம் இருந்துள்ளது. கடந்த நிதியாண்டில் நன்கொடையாக பெற்றது ரூ.1,225 கோடியே 11 லட்சம் ஆகும். இது, முந்தைய நிதியாண்டை விட 320 சதவீதம் அதிகம்.

அவற்றில் தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்தது மட்டும் ரூ.828 கோடியே 36 லட்சம் ஆகும்.

## செலவு விவரம்

செலவுகளை பொறுத்தவரை, பா.ஜனதாதான் அதிகமாக செலவிட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் மார்ச் 16-ந் தேதி, நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதால், செலவு அதிகரித்துள்ளது.

பா.ஜனதா ரூ.1,754 கோடியே 6 லட்சம் செலவழித்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டு செலவழித்ததை விட 60 சதவீதம் அதிகம்.

அதில், விளம்பரங்களுக்காக ரூ.591 கோடி, விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் பயன்பாட்டுக்காக ரூ.174 கோடி, தனது கட்சி வேட்பாளர்களுக்கு நிதியுதவியாக ரூ.191 கோடியே 6 லட்சம், பொதுக்கூட்டங்களுக்காக ரூ.84 கோடியே 32 லட்சம் செலவிட்டுள்ளது.

## பாத யாத்திரை செலவுகள்

காங்கிரஸ் கட்சி கடந்த நிதியாண்டில் ரூ.619 கோடியே 67 லட்சம் செலவழித்துள்ளது. அதில், மின்னணு ஊடகங்களுக்கு ரூ.207 கோடியும், அச்சு ஊடகங்களுக்கு ரூ.43 கோடியும் செலவிட்டுள்ளது.

விமானங்கள், ஹெலிகாப்டர்களுக்கு ரூ.62 கோடியே 65 லட்சமும், வேட்பாளர்களுக்கு நிதியுதவி அளித்ததில் ரூ.238 கோடியும், விளம்பரங்களுக்கு ரூ.28 கோடியும், சமூக ஊடக பயன்பாடுகளுக்கு ரூ.79 கோடியே 78 லட்சமும் செலவழித்துள்ளது.

ராகுல்காந்தியின் முதல் கட்ட பாதயாத்திரைக்கு ரூ.71 கோடியே 84 லட்சமும், 2-ம்கட்ட யாத்திரைக்கு ரூ.49 கோடியே 63 லட்சமும் செலவழித்துள்ளது.

## திரிணாமுல் காங்கிரஸ்

மேற்கு வங்காள மாநில முதல்-மந்திரி மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியிடம் ரூ.646 கோடியே 39 லட்சம் கையிருப்பு இருந்துள்ளது.

அதற்கு முந்தைய நிதியாண்டில், ரூ.333 கோடி மட்டுமே இருந்தது. அதன் வருவாயில் 95 சதவீதம், தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்துள்ளது.

DINAMALAR
Dated: 29.01.2025

# பா.ஜ., காங்கிரஸ் வருவாய் கடந்த நிதியாண்டில் உயர்வு

**புதுடில்லி, ஜன. 29–** கடந்த 2023 – 2024 நிதியாண்டில், பா.ஜ.,வின் வருவாய் 83 சதவீதம் உயர்ந்தது. காங்கிரசின் வருவாய், 170 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும், தங்களுடைய தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வரவு – செலவு கணக்கை தேர்தல் கமிஷனில் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்படி, 2023 – 2024ம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்கை, பா.ஜ., மற்றும் காங்., தாக்கல் செய்துள்ளன.

அதில் கூறப்பட்டு உள்ளதாவது:

பா.ஜ.,வின் ஆண்டு வருவாய் 83 சதவீதம் உயர்ந்து, 4,340.5 கோடி ரூபாயாக அதிகரித்தது. தேர்தல் பத்திரங்கள் வாயிலாக மட்டும், 1,685 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. முந்தைய ஆண்டில் அதன் வருவாய், 2,360 கோடி ரூபாயாக இருந்தது.

காங்கிரசின் வருவாய், 452 கோடி ரூபாயில் இருந்து, 1,225 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, 170 சதவீத உயர்வாகும்.

அதுபோல, தேர்தல் பத்திரங்கள் வாயிலான வருவாய், 171 கோடி ரூபாயில் இருந்து, 828.4 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, 384 சதவீத உயர்வாகும்.

பா.ஜ.,வின் செலவு 62 சதவீதமாகவும், காங்கிரசின் செலவு 120 சதவீதமாகவும் உயர்ந்தது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.